# வருடாந்த அறிக்கை

**2013**

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்

யக்கலை

# வருடாந்த அறிக்கை
# 2013

## கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடம்
## களனிப் பல்கலைக்கழகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1995 மார்ச் 13ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 862∴8 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக 1978 இல.16 பல்கலைக்கழக சட்டத்தின் 24 அ(2) மற்றும் 24(ஆ) வின் கீழ் 1995 இல 01 என்ற கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை நிறுவுவதைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.அதனூடாக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயர் கல்விப்பீடமாக நிறுவப்பட்டுள்ளது.

அந்த பிரகடனத்தில் ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகிய 5வருட பட்டப்பாடனெறிகளை நடாத்துவது முக்கியமான நோக்கமாக உள்ளது.

அதற்கமைய 1995 மார்ச் 01ம் திகதி முதல் உயர் கல்விப்பீடமாக நடாத்திச்செல்லும் இந்த நிருவகத்தின் 2013ம் ஆண்டுக்கான நிருவக நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கிய அறிக்கை,இறுதி கணக்கறிக்கை மற்றும் 2012 ஆண்டுக்காக இந்த நிருவகம் சம்பந்தமான அரச கணக்காய்வாளரால் தரப்பட்ட அறிக்கையையும் இத்துடன் முன்வைக்கின்றேன்.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே
பணிப்பாளர்

# பணிப்பாளரின் அறிக்கை

நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பாட்டுப் பணிகளை எட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட 2013 – 2017 வரையான இணைந்த திட்டத்தை இந்நிறுவனத்தின் 2013.07.19ம் திகதி இடம் பெற்ற 206 ஆவது முகாமைத்துவ சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பட்டத்தை எதிர்பார்க்கும் மாணவர்கள் மற்றும் பணியாளர் சபையின் செயற்சாதனையை மதிப்பீடு செய்யக்கூடிய மட்டத்தை எட்ட முடியும் என மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இணைந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டும் போது தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக ஒரு சில இலக்குகளை எட்டத் தவறியதாகக் குறிப்பிட வேண்டும்.

இணைந்த திட்டத்தை மறுசீரமைப்பதன் மூலம் இணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை ஓரளவு எட்டமுடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே

பணிப்பாளர்

# உள்ளடக்கம்

| | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01. | நிறுவகத்தின் நோக்கு | 01 |
| 02. | செயற்பணி | 02 |
| 03. | பணிப்பாளரின் செய்தி | 03 |
| 04. | வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல் | 04 |
| 05. | தேசிய மாணவர்கள் பற்றிய தகவல் | 04 |
| 06. | வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய தகவல் | 04 |
| 07. | கல்விசார் பணியாளர் சபையின் தகவல் | 05 - 07 |
| 08. | கல்விசாரா பணியாளர் சபையின் தகவல் | 08 |
| 09. | ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம் | 08 - 09 |
| 10. | நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம் | 09 |
| 11. | பெற்ற விருதுகள் பற்றிய விபரம் | 10 |
| 12. | ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல் | 10 |
| 13. | மீண்டெழும் செலவு விபரங்கள் | 11 |
| 14. | மூலதன செலவு பற்றிய விபரங்கள் | 11 |
| 15. | செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.'.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு) | 11 - 12 |
| 16. | திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம் (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு ) | 12 |
| 17. | நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு) | 13 |
| 18. | நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்) | 13 |
| 19. | நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு | 13 |
| 20. | உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2013 இல் கிடைத்தவை | 14 |

| | | |
|---|---|---|
| 21. | வேறு விபரங்கள் | 14 |
| | 21.1 நூலகம் | 14 |
| | 21.2 கணினிப் பிரிவு | 14 |
| | 21.3 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல் | 14 |
| 22. | பணிப்பாளரின் அறிக்கை | 15 - 16 |
| 23. | 2013.12.31 க்கு நிதி நிலைமை பற்றிய அறிக்கை | 18 - 19 |
| 24. | 2013. 12.31 உடன் முடிவடையும் வருடத்துக்கான வரவு செலவு பற்றிய அறிக்கை | 20 - 21 |
| 25. | கணக்காய்வாளர் அறிக்கை | 22 - 31 |
| 26. | கணக்காய்வாளர் அறிக்கைக்கான விடைகள் | 32 - 36 |

**1. நிறுவனத்தின் நோக்கு :**

நோக்கு

திறமைமிக்க பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம்
ஆயுர்வேத கற்கை தொடர்பில் அதி சிறந்த
மத்திய நிலையமாக திகழ்தல்.

2. பணிக்கூற்று :

## பணிக்கூற்று

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கற்கை நிறுவனத்தின் பணிகளாக அமைவது ஆயுர்வேத வைத்திய துறையின் விஞ்ஞான ரீதியிலான அறிவு மற்றும் விளக்கத்தை விருத்தி செய்தல் உட்பட அறிவினை விரிவுபடுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் செய்றபாடுகளை அமுல்படுத்தல்

"இந்நிறுவத்தில் கல்வி பயிலும் மாணவர்களை சகல மட்டங்களிலும் முன்னேற்றுவதற்காக பொருத்தமான சூழலை உருவாக்குதல், ஆயுர்வேத வைத்திய கல்வியில் பிரயோக மற்றும் ஆராய்ச்சியினை விருத்தி செய்வதற்காக பொருத்தமான சூழலை கட்டியெழுப்புதல், இலங்கையின் சுகாதாரத் துறையில் தேவைகளுக்கு ஏற்றவாறு நவீன கற்ப்பித்தல்கள் மற்றும் பயிற்சிகள் ஊடாக அறிவினை எட்டும் வகையில் பிரயோக பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட சூழலை கட்டியெழுப்புதல், அமுலில் உள்ள ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை பட்டப்பாட நெறியில் கட்டமைக்கப்பட்ட மாற்றங்களை தோற்றுவித்து மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக திட்டங்களை வகுத்தல் இலங்கையில் மற்றும் இலங்கைக்கு வெளியே சுகாதாரத் துறையுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பினை கட்டியெழுப்புதல், தேவையாயன தகைமை மற்றும் ஆர்வம் கொண்ட மானிட வளக்குழுவினை நிறுவனத்தில் உருவாக்குதல்"

3. பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி :

அ. அறிமுகம்

நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்றினை எட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட 2013 – 2017 வரையான இணைந்த திட்டங்கள் இந்நிறுவனத்தின் 2013.07.19ம் திகதி இடம் பெற்ற 206 வது முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆ. வெற்றிகள்

பட்டத்தை எதிர்பார்த்துள்ள மாணவர்கள் மற்றும் கல்வி சார் பணியாளர் சபையின் செயற்சாதனையினை போற்றத்தக்க மட்டத்திற்கு எட்டமுடிந்துள்ளதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

இ. குறைபாடுகள்

இணைந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டும் போது தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக ஒருசில இலக்குகளை எட்டுவதற்கு முடியவில்லை என்பதனை குறிப்பிட வேண்டும்.

ஈ. நிறுவனத்தின் திட்டங்கள்

இணைந்த திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் கட்டமைக்கப்பட்ட திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கு குறிப்பிட்ட அளவினால் எதிர்வரும் ஆண்டில் எட்ட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பாடவிதான மறுசீரமைப்பு பணிகள் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டில் அமுல்படுத்தப்பட்டதுடன் 2010 – 2011 கல்வி ஆண்டில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக புதிய பாடவிதானத்திற்கமைய விரிவுரைகளை ஆரம்பிக்க முடிந்தது.

விஞ்ஞான நிறுவனத்தின் பிரதான குறைபாடுகளாக காணப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் 2013ம் ஆண்டு புதிய மின் பிரப்பாக்கியினை பொருத்துவதற்கு முடியும் என எதிர்பார்க்கிறேன்.

நிறுவனத்திற்காக காணப்படும் காணியின் அளவு பற்றாக்குறை என்பதனால் நிறுவனத்தை சூழ உள்ள காணியினை சுவிகரிப்பதற்கான பணிகளின் கோரிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை அது சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல எதிர்பார்க்கிறேன்.

4. வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த கல்வி சார் பணியாளர் சபை | மொத்த கல்வி சாரா பணியாளர் சபை |
|---|---|---|---|---|
| கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத வைத்திய விஞ்ஞான நிறுவகம் | ஆயுர்வேத வைத்திய விஞ்ஞான மற்றும் சத்திர சிகிச்சைப் பட்டம் டீ.யு.ஆ.ளு. | 407 | | |
| முழு மொத்தம் | | 407 | | |

5. உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொழி | ஆட் சேர்ப்பு 2012 | 1வது ஆண்டு மாணவர்கள் | 2வது ஆண்டு மாணவர்கள | 3வது ஆண்டு மாணவர்கள | 4வது ஆண்டு மாணவர்கள | 5வது ஆண்டு மாணவர்கள் | பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத விஞ்ஞான நிறுவகம் | டீ.யு.ஆ.ளு. | ஆங்கிலம் | 120 | 96 | 83 | | | | 70 |
| | | சிங்களம் | | | | 95 | 83 | 50 | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | 96 | 83 | 95 | 83 | 50 | 70 |

6. வெளிநாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் :

| நிறுவனம் | பாடநெறி | மொழி | ஆட் சேர்ப்பு 2012 | 1வது ஆண்டு மாணவர்கள் | 2வது ஆண்டு மாணவர்கள | 3வது ஆண்டு மாணவர்கள | 4வது ஆண்டு மாணவர்கள | பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | | | |

7" கல்விசார் பணியாளர் சபை விபரங்கள் :

| நிறுவனம் | பாடங்கள் | மொழி | சிரே'ட பேராசிரியர்கள் | பேராசிரியர்கள் | சிரே'ட விரிவுரையாளர்கள் | விரிவுரையாளர்கள் | உதவி விரிவுரையாளர்கள் | ஆலோசகர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சத்திர சிகிச்சை சாலக்கிய | சத்திர சிகிச்சை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| | சாலக்கிய | சிங்களம் | - | - | கலாநிதி 01 | - | பயிலுநர் 01 | - |
| சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | பெண்ணியல் நோய் | சிங்களம் | - | - | 02 | | பயிலுநர் 03 | கண்காட்சி 01 |
| | சிறுவர் நோய் | சிங்களம் | | | | | | |
| | மகப்பேற்று | சிங்களம் | | | | | | |
| திரவ குண விஞ்ஞானம் | திரவ குண விஞ்ஞான | சிங்களம் ஆங்கிலம் | - | 01 | 04 | - | பயிலுநர் 01 | |
| | சுவைக் கலை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 02 | - | | |
| | பைசச்ச சிந்தனை | சிங்களம் ஆங்கிலம் | - | - | 02 | - | | |
| | மூலிகை பயிர்ச் செய்கை | ஆங்கிலம் சிங்களம் | - - - | - - - | - - - | - | பயிலுநர் 01 | கண்காட்சி 02 |
| | இராசனவியல் | ஆங்கிலம் | - | - | - | - | | |
| | தாவர இரசாயனம் மற்றும் இயற்கை | ஆங்கிலம் | | | | - | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உற்பத்திகள் | | | | | | | |
| சிகித்சா துறை | ரோக விஞ்ஞானம் | ஆங்கிலம் | | | 08 | 03 | | 01 |
| | காய சிகித்சா | | | | | | | |
| | தேசிய சிகித்சா | | | | | | | |
| | அகததந்தர | | | | | | | |
| | ஸ்வாச்த | | | | | | | |
| | நோயியல் | ஆங்கிலம | | | | | | |
| | சட்ட மருத்துவம் | | | | | | | |
| | ஆயுர்வேத ஆராய்ச்சி | | | | | | | |
| அடிப்படைக் கொள்கைகள் துறை | ஹிந்திமொழி | ஆங்கிலம | | | 06 | 03 | 06 | |
| | ஆங்கிலம் | | | | | | | |
| | சமச்கிருதம் | | | | | | | |
| | சோதிடம் | | | | | | | |
| | பூத விஞ்ஞானம் | | | | | | | |
| | மருத்துவ வரலாரு | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (மனித மொத்த உடற் கூற்றியல்)ஆயர் வேத பாகம் நவீன பாகம் | | | | | | | | |
| அடிப்படைக் கொள்கைகள் துறை | உயிர் இராசாயனத்திற்-கான அறிமுகம் | | | | | | | | |
| | ஆயுர்வேத மருத்துவக் ல்கவிக்கான ஆங்கிலம் | | | | | | | | |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்-I,II | | | | | | | | |
| | அறிவியல்சார் தொடர்பாடலுக்க-ான உயர்தர ஆங்கிலம்-I,II | | | | | | | | |
| | பதார்த்த விஞ்ஞானம் | | | | | | | | |
| | மனித இழையவியல் | | | | | | | | |
| | (முனித உடலியல)-II ஆயர்வேத பாகம் நவீன பாகம் | | | | | | | | |
| | வளர்சிதை மாற்றமும் சத்துணவும் | | | | | | | | |
| | ஆயுர்வேதத்திற் கான சமச்கிருதம்-I | | | | | | | | |
| | ஆயுர்வேதப் பயிற்சிக்கான | | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தமிழ்மொழி | | | | | | | |
| அடிப்படைக் கொள்கைகள் துறை | ஆயுர்வேதப் பயிற்சிக்கான ஹிந்திமொழி | | | | | | | |
| | சிசுவளரியலும் மரபு வழிப் பண்பியலும் | | | | | | | |
| | மூலக்கூறு உயரியல் | | | | | | | |
| | -(மனித உடலியம்)- ஐஐஐ- ஆயுர்வேத பாகம் நவீன பாகம் | | | | | | | |
| | நோய் எதிர்ப்பியல் | | | | | | | |
| | ஆயுர்வேதத்திற்-கான சமச்கிருதம்-II | | | | | | | |
| | ஆயுர்வேதத்திற்-கான உயர்ற்கைகளுக்-கான சமச்கிருதம்-II | | | | | | | |

8“ கல்வி சாரா பணியாளர் சபையின் விபரங்கள் :

| நிறுவனப்பிரிவு | நிறைவேற்று பணியாளர் சபை | சிரே'ட பதவி நிலை | பதவி நிலை | கனி'ட | மொத்த ஊழியர்கள் |
|---|---|---|---|---|---|
| சிகிச்சை | - | 02 | 02 | - | 02 |
| சத்திர சிகிச்சை சாலக்கிய | - | 01 | 01 | - | 01 |
| பெண்ணியல் மற்றும் சிறுவர் நோய் | - | - | 02 | - | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரவக் குண விஞ்ஞானம் | - | - | 03 | 01 | 02 |
| மூலதர்மம் ூ வைத்திய விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவு | ூ01 | 02 | 02 | 02 | 02 |
| நிருவாகம் | 01 | 02 | 11 | 07 | 03 |
| பராமரிப்பு | - | 01 | 02 | 04 | 07 |
| பரீட்சை | 01 | 05 | 03 | 01 | - |
| கணக்கு | 02 | 03 | 08 | - | 02 |
| நூலகம் | 02 | 02 | 01 | 03 | 02 |
| கணணி | - | - | 01 | - | 01 |
| பட்டப்பின் பட்டப் பகுதி | - | - | 02 | - | - |
| முழு மொத்தம் | 07 | 18 | 38 | 18 | 23 |

ூ சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்

9. ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பான விபரங்கள் :

| பாடங்கள் | வெளியீடு | | நிதி உழைப்பு | சமர்ப்பிப்பு |
|---|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | சத்திர சிகிச்சை சாலக்கிய<br>பெண்ணியல் மற்றும் சிறுவர் நோய்<br>திரவ குண விஞ்ஞானம்<br>சிகிச்சை<br>மூல தர்மம் | 05<br>04<br>06<br>08<br>11 | | 02<br>-<br>22<br>08<br>05 |
| ஆ. புதிய கண்டுபிடிப்புக்கள் | திரவ குண விஞ்ஞானம் | | | 01 |
| இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | | | | |
| ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை | சத்திர சிகிச்சை சாலக்கிய | 01 | | |
| உ. ஆவணங்களின் எண்ணிக்கை | சத்திர சிகிச்சை சாலக்கிய<br><br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>சிகிச்சை<br>மூல தர்மம் | 04<br>04<br>03<br>05<br>01 | | 01<br>03<br>-<br>02<br>01 |
| ஊ. ஏனையவை | திரவ குண விஞ்ஞானம் | | | 01 |
| முழு மொத்தம் | | 52 | | 46 |

10. நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் தொடர்பான விபரங்கள் :

| பாடங்கள் | பங்கேற்பு | பூரணப்படுத்தப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவைகள் |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட வேலைத்திட்டங்கள் | | | |
| சத்திர சிகிச்சை சாலக்கிய | 01 | - | |
| சிகிச்சை | 01 | - | |
| திரவ குண விஞ்ஞானம் | 03 | 01 | |

| | | | |
|---|---|---|---|
| ஆ. பட்டப்பின் டிப்ளோமா வேலைத்திட்டங்கள்<br>திரவ குண விஞ்ஞானம் | 02 | - | - |
| இ. பட்ட வேலைத் திட்டங்கள் | | | |
| ஈ. டிப்ளோமா வேலைத்திட்டங்கள் | | | |
| உ. சான்றிதழ் பாடநெறி வேலைத்திட்டங்கள்<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>திரவக் குண விஞ்ஞானம் | -<br>07 | 01<br>04 | 03<br>- |
| ஊ. ஏனையவை<br>சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய்<br>திரவக் குண விஞ்ஞானம்<br>மூல தர்மம்<br>சத்திர சிகிச்சை சாலக்கிய | 04<br>13<br>06<br>02 | -<br>01<br>-<br>- | 05<br>01<br>- |
| **மொத்த எண்ணிக்கை** | 39 | 07 | 09 |

11. **விருதுகள் பெற்றுக் கொண்டமை தொடர்பான விபரங்கள் :**

| | விடயங்கள் | விருதுகளின் எண்ணிக்கை | கல்வி சார் பணியாளர் சபை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அ. உள்நாட்டு விருது | சத்திர சிகிச்சை<br>சாலக்கிய<br>திரவக் குண<br>விஞ்ஞானம் | | | |
| ஆ. தேசிய விருது | சிறுவர் மற்றும்<br>பெண்ணியல்<br>நோய் | | | |
| இ. சர்வதேச விருது | சத்திர சிகிச்சை<br>சிறுவர் மற்றும்<br>பெண்ணியல்<br>நோய் | | | |
| ஈ. ஏனையவை | | | | |
| **மொத்த எண்ணிக்கை** | | | | |

12. ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் :

| கற்கைப்பிரிவு | பாடநெறி | மொழி | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | பட்டப்பின் பட்டம் | தத்துவமானி | முது மானி |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிறுவர் மற்றும் பெண்ணியல் நோய் | ஆயுர்வேத அலங்கார சான்றிதழ் பாடநெறி | சிங்களம் | 01 | ✓ | | | | |
| | ஸ்கானின் சான்றிதழ் பாடநெறி | சிங்களம் | 01 | | | | | |
| **மொத்த எண்ணிக்கை** | | | 02 | | | | | |

13. மீண்டெழும் செலவினம் தொடர்பான விபரங்கள் :

| விடயங்கள் | 2012 | 2013 |
|---|---|---|
| அ. சம்பளம், கொடுப்பனவு | 103,904,513 | 116,786,193 |
| ஆ. பிரயாணச் செலவு | 191,069 | 513,557 |
| இ. விநியோகம் | 6,738,429 | 6,348,978 |
| ஈ. பராமரிப்பு | 2,957,210 | 2,704,778 |
| உ. கணக்கீட்டுச் சேவை | 21,714,708 | 23,559,257 |
| ஊ. ஏனையவை | 4,570,415 | 8,235,985 |
| மொத்த எண்ணிக்கை | **140,076,344** | **158,148,748** |

14. மூலதனச் செலவினம் தொடர்பான விபரங்கள் :

| விடயங்கள் | 2012 | 2013 |
|---|---|---|
| மூலதன சொத்துக்களை விருத்தி செய்தல் | 5,020,467 | 13,586,481 |

| | | |
|---|---|---|
| சொத்துக்களைூ கொள்வனவு செய்தல் | 9,147,244 | 15,799,948 |
| நிர்மானிப்பு | 32,758,339 | 2,766,108 |
| ஏனையவை | 3,272,038 | |
| **முழு மொத்தம்** | **50,198,088** | 32,152,537 |

15. செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்கள் (உள்நாட்டு ∴ வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு) :

| பெயர் மற்றும் விபரங்கள் | கடன் ∴ உதவி | உதவி வழங்கும் நிறுவனம் | மொத்த செலவினம் | நிதியக் கிடைப்பனவுகள் | வீத்தியாசம் |
|---|---|---|---|---|---|
| வைத்தியர் டப். ஏ. எல் சந்திரசிறீ | | ஃஊயுளு | | | |
| 2006 | 687,150.00 | | 687,150.00 | 687,150.00 | |
| 2008 | 687,150.00 | | 687,150.00 | 687,150.00 | |
| 2009 | 687,150.00 | | 528,351.28 | 687,150.00 | 158,789.92 |
| வைத்தியர் எஸ். எம். எஸ் சமரகோன் | 287,470.79 | ஃஊயுளு | 287,470.79 | 287,470.79 | |
| வைத்தியர் திஸ்ஸ ஹேவாவிதான | | | | | |
| 2008 | 250,000.00 | | 250,000.00 | 250,000.00 | |
| 2010 | 250,000.00 | ரு.பு.ஊ.சு.கு | 250,000.00 | 250,000.00 | |
| 2011 | 124,800.00 | | 105,143.32 | 124,800.00 | 19,656,68 |
| வைத்தியர் எச். எஸ் சகுந்தலா | 250,000.00 | | 225,295.04 | 250,000.00 | 24,704.96 |
| வைத்தியர் ரூபா மதநாயக்க 2009 | 250,000.00 | ரு.பு.ஊ. சு.கு. | 221,918.91 | 250,000.00 | 28,081.09 |
| வைத்தியர் ஏ. ஏ. ஜே புஸ்பகுமார 2010 | 500,000.00 | ரு.பு.ஊ. சு.கு. | 309,176.62 | 500,000.00 | 190,823.38 |
| வைத்தியர் ஜே. எம். பீ. ஆர். கே. ஜெயசிங்க ‘ 2010 | 500,000.00 | ரு.பு.ஊ. சு.கு. | 139,577.58 | 250,000.00 | 19,822.42 |
| வைத்தியர் ஜே. ஏ. டி. பீ. பீ. ஜெயகொடி | 500,000.00 | ரு.பு.ஊ. சு. கு. | 500,557,.14 | 500,000.00 | 557.14 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2010 | | | | | |
| வைத்தியர் எச். பீ. வக்கும்புற<br>2010<br>2013 | 250,000.00<br>250,000.00 | ரு.பு.ஊ. சு.கு. | 250,000.00<br>193.15 | 250,000.00<br>250,000.00 | 249,806.00 |
| வைத்தியர் டப். பீ. பீ. ஏச். எஸ். கருணாரத்ன<br>2013 | 500,000.00 | ரு.பு.ஊ. சு.கு | 500,000.00 | 500,000.00 | |

**16.** செயற்றிட்ட செலவினங்கள் தொடர்பான விபரங்கள் : (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்புக்கள்) :

| பெயர் | மொத்த செலவினம் | செலவினம் 2012 | செலவினம் 2013 | திரண்ட செலவினம் 2013.12.31ம் திகதியன்று | முன்னேற்றம் (மூ) |
|---|---|---|---|---|---|
| வைத்தியர் டப். ஏ. எல் சந்திரசிறி | 2,061,450.00 | 1,902,651.28 | - | 1,902,651.28 | 92 |
| வைத்தியர் எஸ். எம். எஸ் சமரகோன் | 287,470.79 | 219,747.79 | 67,723.00 | 287,470.79 | 100 |
| வைத்தியர் திஸ்ஸ ஹேவாவித்தான | 624,800.00 | 537,661.32 | 67,482.00 | 605,143.32 | 97 |
| வைத்தியர் எச். எஸ் சகுந்தலா | 250,000.90 | 225,295.04 | - | 225,295.04 | 90 |
| வைத்தியர் ரூபா மதநாயக்க | 250,000.00 | 207,295.00 | 18,000.00 | 225,295.04 | 90 |
| வைத்தியர் ஏ. ஏ. ஜே புஸ்பகுமார | 500,000.00 | 268,392.62 | 40,784.00 | 309,176.62 | 62 |
| வைத்தியர் ஜே. எம். பீ. ஆர். கே. ஜெயசிங்ஹ | 250,000.00 | 212,177.58 | 18,000.00 | 230,177.58 | 92 |
| வைத்தியர் ஜே. ஏ. டி. பீ. பீ. ஜெயக்கொடி | 500,000.00 | 500,000.00 | - | 500,000.00 | 100 |
| வைத்தியர் எஸ். பீ. வக்கும்புற | 500,000.00 | 250,193.15 | - | 250,193.15 | 50 |
| வைத்தியர் டப். பீ. பீ. ஏச். எஸ். கருணாரத்ன | 500,000.00 | - | 500,000.00 | 500,000.00 | 100 |
| மொத்த எண்ணிக்கை | | | | | |

17. நிதி நிலைமைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான விபரங்கள் (செலவினம்) :

| விடயங்கள் | 2013 ஒதுக்கீடு | 2013 செலவினம் | எஞ்சியவை தாண்டிய (எல்லையைத் தாண்டல்) |
|---|---|---|---|
| அரச மீண்டெழும் மானியங்கள் | 137,100.000 | 158,148,748 | |
| அரச மூலதன மானியங்கள் | 50,650,000 | 32,152,537 | . |
| **மொத்த எண்ணிக்கை** | **187,750,000** | **190,301,285** | |

18. நிதி நிலைமைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான விபரங்கள் (உள்ளக வருமானம்) :

| வருமானத்தின் தன்மை | ஒதுக்கீடு ∴ ஒதுக்கீட்டு மதிப்பீடு | கிடைப்பனவு 2012 | குறைவு ∴ அதிகரிப்பு |
|---|---|---|---|
| அ. பட்ட எதிர்பார்ப்பு | 297,375,000 | 9,406,970 | - |
| ஆ. பட்டப்பின் பட்டம் | - | - | - |
| இ. ஆலோசனை | - | - | - |
| ஈ. ஏனையவை – பாடநெறி நிதி | | 15,266,960 | - |
| முழு மொத்தம் | **297,375,000** | **24,673,930** | - |

19. நிதி செயற்பாட்டுப் பகுப்பாய்வு - 2013 :

| விடயங்கள் | குறியீடு | ஒரு மாணவரின் செலவினம் |
|---|---|---|
| அ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ) ∴ மாணவர் எண்ணிக்கை | - | 3888,571 |
| ஆ. ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ) ∴ மாணவர் எண்ணிக்கை | - | 78998 |
| **மொத்த எண்ணிக்கை** | - | **467569** |

20. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2013ம் ஆண்டுக்குள் கிடைப்பனவு :

| உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்கள் | செலவினம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1. சொத்து மீண்டெழும் மற்றும் முன்னேற்றங்கள் | 13,586,480 | 100% |
| 2. நிர்மாணிப்பு | 2,766,108 | 25% |
| மொத்த எண்ணிக்கை | **16,352,588** | |

21. ஏனைய விபரங்கள் (அறிக்கைக்குரிய) :

21.1 நூலகம்

2013ம் ஆண்டில் புத்தக மீள் மதிப்பீட்டு சுருக்கம்

| விபரங்கள் | கொள்வனவு | நன்கொடை | மொத்தம் |
|---|---|---|---|
| புத்தகம் | 379 | | 379 |
| சுற்றுலா வெளியீடுகள் | 07 | - | 07 |

21.2 **கணணிப் பிரிவு**

நிறுவனத்திடமுள்ள சிறு கணனி அலகில் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வசதிகள் குறைந்த தரத்தில் இருந்ததால் எல்லா வசதிகளையும் கொண்ட நூறு கணினிகளை உள்ளடக்கிய புதிய கணினி மத்திய நிலையத்தை ஆரம்பிப்பதும், இணையத்தள வசதியை நிறுவனத்தின் அனைத்து இடங்களுக்கும் வழங்கும் நோக்கத்துடன் இணையத்தள வியாபகப்படுத்தல் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

21.3 **உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

மருந்து கட்டிடம், நிருவாகக் கட்டிடம் மற்றும் கற்கைப் பிரிவின் கட்டிடங்களின் நிர்மானிப்பிற்கு உரியதான ஆலோசனை சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யு 14 கட்டிடம் விஞ்ஞான ஆய்வுகூடத்தொகுதியாக மாற்றும் செய்தல்

சிறியளவிளான கேட்போர்கூடம் ஒன்றை அமைத்தல்

ஊள்ளக பாதைகளில் காபட் பதித்து செய்து நவீனமயமாக்கல் மற்றும் விரிவுரை மண்டபங்களை நவீனமயமாக்கல்

## பணிப்பாளர் அறிக்கை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரமாணங்களுக்கிணங்க கம்பஹா விக்கிரமாராச்சிஆயுர்வேத நிறுவக நிதிசார் விவகாரங்கள் மீதான அறிக்கையே இதுவாகும்.

பொதுத் திறைசேரியினால் நிறுவகத்திற்கு 2013 ஆம் ஆண்டிற்கான விடுவிக்கப்பட்ட அரச மானியம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| **மீண்டுவரும் மானியம்** | | |
| ஆரச மதிப்பீட்டின் கீழான உதவி | | 137.10 |
| ஏனைய மீண்டுவரும் மூலகங்களிலிருந்தான வருமானம் | | 24.67 |
| மொத்த மீண்டுவரும் மானியம் | | 161.77 |
| **சேர்க்குக.** | | |
| மூலதன கடன் தீர்ப்பு | | 25.83 |
| மொத்தமீண்டுவரும் மானியம் | | 187.60 |
| **மூலதன மானியம்** | | 50.63 |
| செலவினம் | 101 - மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு | 13.58 |
| | 102 - பொருட்கள்,உபகரணங்கள், நூலக நூல்கள் +பருவ இதழ்களின் ஈட்டல் | 15.79 |
| | 103 - கட்டடங்கள் நிருமாணம்,அறிவு விருத்தியாக்கம் +நிறுவக அபிவிருத்தி | 2.76 |
| | மொத்த மூலதனச் செலவினம் | 32.15 |

வருமானம்

2013 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க மானியமானது 137,100,000. ஏனைய மூலகங்களிலிருந்தான வருமானம் ரூபா. 24,673,930 ஆக இருந்தது. அதன் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா. 187,606,357 ஆக இருந்தது.

செலவினம்

2013 ஆம் ஆண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினம் 196,076,530 ஆக இருந்தது. செலவினம் மீதான மிகைவருமானம் ரூபா. 8,470,174 ஆக இருந்தது.

நிலையான சொத்துக்களின் தேய்மானம்

2013 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துக்களின் தேய்மானத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகைப்பணம் 25,832,426 ஆக இருந்தது.

மூலதன சேவைகளின் விளைவளவு

செலவின உரிமை வாக்குத்தொகுதி 101 - புனரமைப்பு மற்றும் பராமரிப்பு

2013 ஆம் ஆண்டில்,புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்கான அரசமானியம் ரூபா. 14,000,000 ஆக இருந்ததுடன், அந்தப் பணத்தொகையில் ஏற்பட்ட செலவினமானது ரூபா 13,586,480 ஆக இருந்தது.

செல்வின உரிமை வாக்குத்தொகுதி 102 - பொருளீட்டல்

2013 ஆம் ஆண்டில் பொருளீட்டல் செலவினத்திற்கென கிடைக்கப்பெற்ற அரச மானியமானது ரூபா. 23,850,000 ஆக இருந்ததுடன், அந்தத் தொகையில் ஏற்பட்டிருந்த செலவினமானது ரூபா. 15,799,947 ஆக இருந்தது.

செலவின உரிமை வாக்குத்தொகுதி 103 - நிருமாணம்

2013 ஆம் ஆண்டில் நிர்மாண செலவினத்திற்கான அரசமானியம் ரூபா 12,800,000 ஆக இருந்ததுடன், அந்தத் தொகையில் ஏற்பட்டிருந்த செலவினம் ரூபா. 2,766,108 ஆக இருந்தது.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக நிதிசார் நிலைமைக்கூற்று

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நடைமுறையற்ற சொத்துக்கள் (குறிப்பு - "அ")** | | | | |
| (அ) காணிகள் | 72,126,250 | | 72,126,250 | |
| (ஆ) கட்டடங்கள் | 167,494,630 | | 163,083,528 | |
| (இ) காரியாலய உபகரணங்கள் | 8,432,755 | | 4,642,250 | |
| (ஈ) ஆய்வுகூட& கற்பித்தல் உபகரணங்கள் | 21,243,726 | | 23,858,556 | |
| (உ) தளபாடங்கள் & பொருத்துக்கள் | 18,565,336 | | 16,170,147 | |
| (ஊ) நுலக நூல்கள் & பருவ இதழ்கள் | 5,324,552 | | 6,177,639 | |
| (எ) மோட்டார் வாகனங்கள் | 4,490,319 | | 7,031,497 | |
| (ஏ) ஆலை& இயந்திரதாதி | 2,931,793 | 300,609,361 | 3,695,535 | 296,785,401 |
| (ஐ) ஏனையவை | | 1,109,358 | | 1,361,857 |
| (ஒ) வளர்ச்சியிலான பணி | | 69,205,669 | | 66,439,561 |
| (ஓ) மூலதன முற்பணம் | | 5,900,954 | | 6,003,579 |
| **முதலீடுகள்** | | | | |
| நிலையான வைப்புக்கள் | | 60,030,163 | | 49,554,753 |
| | | **436,855,505** | | **420,145,150** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| (அ) களஞ்சியமுற்பணக் கணக்கு (அட்டவணை-இ) | 2,171,487 | | 2,141,600 | |
| (ஆ) சில்லறைக் கடன்படுநர்கள் (அட்டவணை -ஈ) | 1,517,040 | | 1,899,540 | |
| (இ) கடன்கள் &முற்பணம் (அட்டவணை -உ) | 19,019,779 | | 20,060,331 | |
| (ஈ) நானாவிதமுற்பணம் - (அட்டவணை -ஊ) | 15,000 | | 6,000 | |
| (உ) ஆராய்ச்சிமுற்பணம் (ஊ) | - | | - | |
| (ஊ) முற்கொடுப்பனவுகள் - (அட்டவணை -எ) | 232,997 | | 10,287 | |
| (எ) காசும் காசுக்குச் சமமானவைகளும் | 31,583,503 | | 19,564,634 | |
| (கற்கைநெறி) | 4,346,319 | | 5,860,067 | |
| (ஏ) சில்லறைப்பணக் கட்டுநிதி | 180 | | 180 | |
| (ஐ) ஏனைய சொத்துக்கள் (அட்டவணை -ஏ) | 3,771,762 | 62,658,067 | 4,451,894 | 53,994,532 |
| மொத்த சொத்துக்கள் | | **499,513,572** | | **474,139,682** |

| | | | | |
|---|---|---|---|---|
| <u>பொறுப்புக்கள்</u> | | | | |
| (அ) நடைமுறைப் பொறுப்புக்கள் (அட்டவணை -ஐ) | 446,200 | | 440,310 | |
| (ஆ) செலுத்தப்படக்கூடியவை (சென்மதிகள்) (அட்டவணைகள் -ஒ,ஓ,ஔ) | 19,837,525 | | 20,370,454 | |
| (இ) அட்டுறுசெலவுகள் | 3,111,222 | **23,394,947** | 1,596,156 | **22,406,920** |
| <u>நடைமுறையற்ற பொறுப்புக்கள்</u> | | | | |
| (அ) பணிக்கொடைக்கான ஏற்பாடு(M) | | 41,663,178 | | 37,599,840 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 65,058,125 | | 60,006,759 |
| மொத்த நிகர சொத்துக்கள் | | 434,455,447 | | 414,132,923 |
| <u>நிகர சொத்துக்கள் /உரிமையாண்மை</u> | | | | |
| (அ) மூலதனம் (செலவிடப்பட்ட) | 248,597,876 | | 242,277,765 | |
| (ஆ) மூலதனம் (செலவிடப்படாத) | 36,483,619 | | 18,359,914 | |
| (இ) ஒதுக்கங்கள் | (27,175,555) | | (17,698,629) | |
| (ஈ) மட்டுப்படுத்தப்பட்ட நிதி (அட்டவணை -ஆ) | 176,549,506 | | 171,193,873 | |
| மொத்த நிகர சொத்துக்கள் (உறுப்புரிமையாண்மை) | | 434,455,44 | | 41,132,923 |

சரியானவையென சான்றளிக்கப்பட்டது.

பேராசிரியர் ஜனிதா ஏ.லியனகே
பணிப்பாளர்

திருமதிடபிள்யு.ஏ.பி.எஸ்..மொலகொட
பிரதி நிதியாளர்.

2013 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கான நிதிசார் நிலைமைக்கூற்று

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| செயற்படு வருமானம் | | | | |
| மீண்டுவரும் மானியம் | | 137,100,000 | | 127,600,000 |
| மூலதன மானியத்தின் கடன்தீர் நிதி | | 25,832,426 | | 19,747,628 |
| ஏனைய வருமானம் | | | | |
| (1) கடன்கள் மற்றும் முற்பணம் ஆகியவற்றிலிருந்தான வட்டி | 807,189 | | 671,479 | |
| (2) நானாவித பற்றுச்சீட்டுக்கள் | 404,651 | | 322,777 | |
| (3) முதலீடுகளிலிருந்தான வட்டி | 6,986,849 | | 5,169,263 | |
| (4) பதிவுக் கட்டணங்கள் | 287,115 | | 36,015 | |
| (5) பரீட்சைக் கட்டணங்கள் | 23,350 | | 20,650 | |
| (6) நூலகத் தண்டப்பணம் | 38,352 | | 39,420 | |
| (7) மருத்துவக் கட்டணங்கள் | 12,870 | | 24,660 | |
| (8) சொத்துக்களிலிருந்தான வாடகை | 351,974 | | 210,728 | |
| (9) வெளியீடுகள் விற்பனை | - | | 500 | |
| (10) வாகனவிற்பனை | 432,074 | | - | |
| (11) இருப்புக்கள் விற்பனை | 62,547 | | 1,219 | |
| (12) கற்கைநெறிகள் வருமானம் | 15,266,960 | | 9,283,946 | |
| | | 24,673,930 | | 15,780,657 |
| | | **187,606,357** | | **163,128,285** |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு செலவுகள் | | | | |
| (1) தனிநபர் சம்பளம் | 116,786,193 | | 103,904,513 | |
| (2) பிரயாண செலவுகள் | 513,557 | | 191,069 | |
| (3) வழங்கல்களும்,பாவிக்கப்பட்டநுகர்வுப் பொருட்களும் | 6,348,978 | | 6,738,429 | |
| (4) பராமரிப்பு | 2,704,778 | | 2,957,210 | |
| (5) ஒப்பந்தம்சார் சேவைகள் | 23,559,257 | | 21,714,708 | |
| (6) ஆராய்ச்சிமற்றும் அபிவிருத்தி | 147,735 | | 450,846 | |
| (7) தேய்மானம் | 25,832,426 | | 19,747,628 | |
| (8) ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 8,088,250 | | 4,119,569 | |
| (9) கற்கைநெறிச் செலவுகள் | 12,095,356 | | 8,787,978 | |
| மொத்த செயற்பாட்டுச் செலவுகள் | | 196,076,530 | | 168,611,950 |
| இயங்குநிலைச் செயற்பாடுகளிலிருந்தான மேலதிகபற்றாக்குறை | | (8,470,174) | | (5,483,665) |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஈசீ/எப்/ஜீடப்ஏஜ/1/13/10 මබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2014 செப்தம்பர் 24

பணிப்பாளர்,

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 இன் 1 ஆம் இலக்க கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் கட்டளையின் 19 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2014 மே 19 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தின்ன மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக நிதியமொன்றை ஏற்படுத்துவது மற்றும் முதலீடு செய்தல் தொடர்பான கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) நிறுவகத்திற்குரிய 243.9 பேர்ச் காணி மற்றும் மோட்டார் வண்டியொன்று என்பவற்றை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 141,060,834 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தை நிதி நிலைமைக்கூற்றில் ஒதுக்கமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் விசேட நிதியத்தின் (Restricted Fund) கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளை நிலையான சொத்துப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 6,296,490 ஆன வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டதுடன், ரூபா 13,586,481 பெறுமதியான கட்டிடங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

### 2.2.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்த வேண்டிய பிணை வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பிணை வைப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்த 03 முதல் 05 ஆண்டு காலமாக இருந்து வரும் ரூபா 165,569 கூட்டுத்தொகையான நிறுத்தி வைத்தல்களை நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கணக்காய்வு திகதியான 2014 யூன் 02 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அறவிடப்பட வேண்டிய விடுதிக்கட்டணங்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாணவர்களின் கற்கைக் காலப்பகுதியில் அறவிடப்படாத ரூபா 254,865 கூட்டுத்தொகையான நிலுவை விடுதிக் கட்டணங்கள் 2014 மே 30 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10:1 ஆம் பிரிவு, 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 07/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மாதமொன்றுக்கு சில நாட்களுக்காக 04 மணித்தியாலத்திற்கு மேல் கடமை புரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையை ஒரு நாளுக்குரிய சம்பளத்திற்காக விகிதப்படுத்தி விடுமுறை தினக்கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன், 1997 ஏப்ரல் 01 ஆம் திகதிய 707 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக கொடுப்பனவு செய்தமையால் ரூபா 19,048 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளியேறல் மற்றும் லீவுகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய புத்தகங்கள் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியணிக்கு செலுத்திய சம்பளம் மற்றும் படிகள் ரூபா 42,224,404 தொகை தொடர்பாக மாணவர் வரவு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரி செயலாளரினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரமில்லாமல் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியதிகள் அடிப்படையில் கட்டணங்களை அறவிட்டு பாடநெறிகளுக்காக வழமையான கடமை நேரத்திலும் வார இறுதி நாள் கடமைகளுக்காகவும் பல்வேறு படிகள் மற்றும் கட்டணங்களாக ரூபா 10,315,605 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,470,174 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,483,665 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,986,509 ஆல் அதிகரித்தமைக்கு தனிப்பட்ட வேதனங்கள் ரூபா 12,881,680 ஆலும் ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினம் ரூபா 5,813,230 ஆலும் அதிகரித்தமை விசேடமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கல்விசார் செயலாற்றுகை தொடர்பாக கணக்காய்விற்கு சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்

நிறுவகத்தின் மீளாய்வாண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 388,771 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் அக்கிரயம் ரூபா 384,825 ஆக இருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டணம் அறவிட்டு நடாத்தப்படுகின்ற பாடநெறி விடயங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. களனி பல்கலைக்கழகத்தின் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நிறுவகத்தில் கட்டணங்கள் அறவிட்டு நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக நியதிகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், களனி பல்கலைக்கழகத்தின் நியதிகளை மிகைத்து பாடநெறிகளை ஒழுங்குபடுத்தியமைக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அரசாங்க விடுமுறை தினங்கள் அல்லது வாரஇறுதி விடுமுறை நாட்களில் வழங்கப்படும் சேவைகளுக்காக கல்விசார் பதவியணியினருக்கு கொடுப்பனவு தொடர்பாக களனி பல்கலைக்கழகத்தின் நியதிகள் மற்றும் நிறுவகத்தின் நியதிகளின் பிரகாரம் வேலை நாளொன்றுக்கு ரூபா 5,000 வீதம் செலுத்த முடியுமான போதிலும், நாளொன்றில் நடாத்தப்பட்ட ஒரு பாடநெறிக்கு ரூபா 5,000 வீதம் செலுத்தியமையால் ரூபா 562,500 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. முகாமைத்துவ சபை தீர்க்கமாக கருதி இக்கொடுப்பனவை செலுத்துவதாக பணிப்பாளரால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைப் பெறுமதியாக ரூபா 69,205,669 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு ஒப்பந்தங்களினதும் நடைமுறை வேலைப் பெறுமதி அதன் ஆரம்ப மீதி மற்றும் மூலதனமாக்கல் என்பன தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிதியங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மனித வள மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையத்தின் (NCAS) ஆய்வு நிதியம்

மனித வள மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையத்தினால் 3 வருட ஆய்வு பட்டப்பின் படிப்பொன்றை பின்பற்றுவதற்காக ரூபா 2,061,450 ஆன தொகை 2006 ஆம் ஆண்டிலிருந்து 3 தவணைகளில் மருத்துவ நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2010 ஒக்தோபர் 05 ஆம் திகதி வரை செலவினங்களின் பின்னர் எஞ்சிய ரூபா 158,798 தொகை 2014 மே 13 ஆம் திகதி வரையில் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், பட்டப்பின் படிப்பிற்கான ஆய்வுக் கட்டுரையும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்டப்பின் படிப்பு ஆய்வு

மூன்று ஆண்டு பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் ஆய்வு நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இரண்டு பேராசிரியர்களுக்கு ரூபா 500,000 தொகை ஆய்வு மானியமாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 447,214 விரிவுரையாளர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன. எனினும் ஆராய்ச்சிகளின் செயல்முன்னேற்ற அறிக்கைகளை வழங்காமை காரணமாக எஞ்சிய ஆய்வு மானியமான ரூபா 52,786 தொகை பயன்படுத்தாமல் விசேட நிதியத்தின் கீழ் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

4.4 பதவியணியினர்

மருத்துவ நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் 48 இல் 07 வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், கல்விசாராப் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான 118 இல் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மருத்துவ நிறுவகத்தின் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 87 பிரதான செயற்பாடுகள் 15 பிரிவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றத்தை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது ஒரே செயற்பாடு பல பிரிவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய உப செயற்பாடுகள் அப்பிரிவுகளுக்கிடையே மாற்றம் செய்யாமல் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் செயன்முன்னேற்ற அறிக்கையிலும் நிதியீட்டம் மற்றும் நிதி செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த செயற்பாடுகளில் ஆண்டின் இறுதி வரையில் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் 20 ஆக இருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ஆனால் பூர்த்தி செய்வதற்கு முடியாத தாமதமான செயற்பாடுகள் 57 ஆக இருந்தன.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலான எதிர்பார்க்கப்பட்ட 87 செயற்பாடுகளில் ஆண்டின் போது 10 செயற்பாடுகள் மாத்திரம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிறுவகத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளின் அளவில் 11 சதவீதத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றை ஒப்பீடு செய்யும் போது 10 சதவீதம் முதல் 262 சதவீதம் வரையான பொருண்மையான விலகல் காணப்பட்டதுடன், பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

2008 ஆம் ஆண்டின் போது ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, ஆயுர்வேத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், மருத்துவ நிறுவகத்தால் அவ்வைத்தியசாலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,940,161 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை. அத்தொகை பெறவேண்டிய நீர்க் கட்டணமாக நடைமுறைச் சொத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போதும் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 24 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) நூலக கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கம்பஹா விக்கிரமராச்சிஆயர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்,யக்கல

| | | |
|---|---|---|
| எனது இலக்கம் : GWA1I/AC4/Audit-2013 | உமது இலக்கம் : EC/F/GW/A1/1/13/10 | திகதி : 10.10.2014 |

திருஎச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காள்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.
இல.306/72,பொல்துவவீதி,
பத்தரமுல்லை

**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கம்பஹா விக்கிரமராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 108 (1) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

1.2. நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு.
1.3. கணக்காள்வாளரின் பொறுப்பு
1.4. முனைப் பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2. **நிதிசார் கூற்றுக்கள்**
2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**2.2.1. கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிப் பற்றாக்குறை காரணமாக, ஊழியர் பணிக்கொடை மானியங்கள் நிதியம் இன்னமும் ஸ்தாபிக்கப்படமுடியாமல் போய்விட்டது.

**2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) காணிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் பெறுமானத்தை மதிப்பீடு செய்யவும் அதனைத் தொடர்ந்து, கணக்காய்வாளரின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு அதனை கணக்குகளுள் பதிவு செய்வதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிதிசார் நிலைமைக் கூற்றின் திட்டவட்டமான (விசேடமான) நிதியின் கீழ் இதற்குமுன்னர் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 141,060,834 தொகையொன்றை நிதிசார் நிலைமைக் கூற்றின் ஒதுக்க நிதியின் கீழ் உள்ளடக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.3. சமரசம் காணப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிசார் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பின்னிணைப்பு ஆகியவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்தப் பெறுமானத்திற்கு இடையிலான முற்று முழுவதுமான வேறுபாடுகள் குறித்த திகதியன்று இந்தக்கால அளவில் திருத்த அமைக்கப்பட்டுள்ளன. இது தற்போது இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2.2.4. **செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

(அ) 571 ஆம் இலக்க நிதிசார் பிரமானங்களின் பிரகாரம் 03 - 05 வரையான வருடங்களுக்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ரூபா. 165,569 தொகையானது தற்போது கொடுத்தத் தீர்க்கப்பட்டுள்ளது.

**(ஆ) செலுத்தப்படவேண்டியகணக்குகள்**

தற்போது அறவிடப்படவேண்டிய விடுதிக் கட்டணங்கள் ரூபா. 239,540.00 ஆக குறைக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகையானது உள்ளகப் பயிற்சிபெற்றவர்களிடமிருந்தான ரூபா 113,980 ஐயும்,தற்போது விடுதிவசதிகளைப் பெற்று வருபவர்களிடமிருந்தான ரூபா 125,560 ஐயும் உள்ளடக்கியுள்ளது.

சான்றிதழ் வழங்கலுக்குமுன்னர் உள்ளகப் பயிலுநர்களிடமிருந்து வருமதியாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

2.2.5. **சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்கிஒழுகாமை.**

சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவைதொடர்பாக,

**(அ) இலங்கைசனநாயகசோசலிஷக் குடியரசின் தாபனக்கோவைஅத்தியாயம் 10.1 இன் கூற்றுமற்றும் 1997 பெப்ருவரி 3 ஆம் திகதியபொதுநிருவாக கூற்றுநிரூபம் இல 07/97.**

கல்விசார் ஆதரவுபதவியணியினர் வகைக்குள் அடக்கப்பட்டுள்ள கனிஷ்ட போதானாசிரியர்கள் அரசவிடுமுறைநாட்களில் உத்தியோகபூர்வகடமைகளில் ஈடுபடுத்தப்படுமாறு வேண்டப்படுகின்றனர். முகாமைத்துவச் சபையின் 199 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் பிரகாரம் அவர்களுக்கு ர்ழழெசயசுநெ படியொன்று செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3 (1) ஆம் இலக்க கூற்று மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.61 ஆம் இலக்க கூற்று.

கல்விசார் பதவியினரின் வரவுச் சான்றினை உறுதிப்படுத்துவதற்கென வரவுப் பதிவேடொன்றைப் பேணுவதற்கான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

(இ) 95 ஆம் இலக்க 1994 ஜுன் 14 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை.

வெளிவாரிக் கற்கைநெறிகள் சம்பந்தப்பட்ட தங்கள் கடமைகளை சாதாரண கடமைகளுக்கு புறஞ்சார்ந்தவகையில் ஆற்றிவரும் கல்விசாரா பதவியணியினருக்கான கொடுப்பனவுகள் நிறுவகத்தின் நிதிசார் குழு மற்றும் முகாமைத்துவச் சபை ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்படும் பிரமாணத்திற்குட்பட்டு ஏனைய பல்கலைக்கழகங்களில் ஏற்றுக கொள்ளப்பட்டுவரும் நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) 842 ஆம் இலக்க 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய பொது திறைசேரிசுற்றறிக்கை.

நிலையான சொத்துக்கள் பதிவேடானது தற்போது இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

3. நிதிசார் மீளாய்வு

3.1. நிதிசார் பெறுபேறுகள்

4. செயற்பாட்டுமீளாய்வு

4.1. கல்விசார் செயலாற்றுகை

(அ) சம்பந்தப்பட்ட விபரங்களை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மாணவர் ஒருவருக்கான செலவு

மாணவர் ஒருவருக்கான செலவினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.2. முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) கட்டணம் அறவிடும் வெளிவாரிக் கற்கைகளிலான கொடுப்பனவுகள், ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளதைப்போன்று ,நிறுவகத்தின் நிதிசார் முழு மற்றும் முகாமைத்துவச் சபை ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணத்திற்கிணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய கொடுப்பனவுகள் ஒவ்வொரு கற்கைநெறியின் மதிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவுகள் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்கும் பொதுத் திறைசேரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போதுஆற்றப்பட்டுவரும் ஒவ்வொருவகைப பணியையும் விளக்கும் பதிவேடொன்று தற்போது பேணப்பட்டு வருவதுடன், ஒவ்வொரு சேவையினதும் பெறுமானம் புறம்பான முறையில் தெளிவுறக் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.3. பயன்படுத்தப்படாத நிதிகள்

(அ) NCASநிறுவகம் ஆராய்ச்சி நோக்கங்களுக்கென நிறுவக விரிவுரையாளர் ஒருவருக்கு ரூபா 2,061,450.00 தொகையொன்றை வழங்கியுள்ளது. இந்தத் தொகைப்பணத்தில் ரூபா 1,902,652.00 பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதித் தொகையான ரூபா 158,798.00 கணக்குப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகைப்பணம் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் பணி நிறைவெய்திய பின்னர் செலுத்தப்படவேண்டியுள்ளது.

(ஆ) இந்த நிறுவகத்தின் விரிவுரையாள்கள் இருவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆராய்ச்சி நிதியமாக ரூபா 500,00.00 வழங்கப்பட்டுள்ளது. கணக்கில் எஞ்சியுள்ள மீதிப்பணம் ஆய்வுச் செயற்பாடுகளுக்கென செலுத்தப்பட வேண்டியுள்ளது.

4.4. ஆளணி

நிறைவேற்று பதவியணியினர் வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ள அதேவேளையில் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் வெற்றிடங்கள் தற்போத நிரப்பப்பட்டு வருகின்றன.

5. பொறுப்புடைமையும் நல்லாட்சியும்

5.1. செயல்திட்டம்

(அ,ஆ,இ,ஈ) ஒவ்வொருதுறை/பிரிவுதொடர்பானசெயற்பாடகள் செயல் திட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய செயற்பாடகள் குறித்துரைக்கப்பட்ட காலவரம்பிற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கூறப்பட்டதற்கிணங்க, அதிகளவிலான இத்தகைய செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள அதேவேளையில் எஞ்சியவை தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

5.2. பாதீட்டுக் கட்டுப்பாடு

வருடாந்த பாதீட்டினை நிருவாகக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.3. **தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் சம்பந்தமான அவதானிப்புக்கள்.**

ஆயுர்வேத போதனா வைத்தியசாலை இடமாற்ற செயல்முறைக்கென நிறுவகத்தினால் செலவிடப்பட்ட ரூபா 1,940,161.00 குறித்து ஆயுர்வேத திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் கூட்டியுரைக்கப்பட்டுள்ளவாறு முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றிலான குறைபாடுகளை இயலுமானவரை குறைத்துக்கொள்வதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படும்.

பேராசிரியர் ஜனிதா ஏ.லியனகே
பணிப்பாளர்

பிரதிகள் :-

தலைவர் - பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு
செயலாளர் - உயர்கல்விஅமைச்சு
செயலாளர் - நிதி,திட்டமிடல் அமைச்சு